பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

07 09 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

2. மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

3. மருத்துவத் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. தேர்தல் வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, வேளாண்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறினார்.

இந்த நடவடிக்கையின் காரணமாக சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வேளாண் உபகரணங்களின் விலைகள் குறைவதுடன் உற்பத்தி செலவும் குறையும் என்பதால் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்று திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

மீன்வளத்துறையை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான் அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டத்தில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அவர், மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதன் மூலம் 8 கோடிக்கும் அதிகமான மீனவ குடும்பங்களின் வாழ்வாதரம் மேம்படும் என்று அவர் தெரிவித்தார்.

உலக அளவிலான போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் மீன் உற்பத்தியை 5 டன்னில் இருந்து 7 டன்னாக அதிகரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் தெரிவித்தார்.

<<<<>>>>

மருத்துவத் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 16 புதிய மருத்துவக் கட்டிடங்களை அவர் திறந்து வைத்துப் பேசினார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் பொது சுகாதாரத்துறை மூலம் 364 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு மாநில அளவில் சனிக்கிழமை தோறும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதை திரு. மாசு. சுப்பிரமணியன் சுட்டிக்காட்டினார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் கல்வித் துறையின் மேம்பாட்டிற்காக தமிழக அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் மருத்துவர்களின் பற்றாக்குறையை களையும் வகையில் போதிய அளவிலான மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்தாக அவர் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக திரு. ராஜகண்ணப்பன் கூறினார்.

**<<<<>>>>**

2021ஆம் தேர்தலையொட்டி அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பேரூராட்சியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று அஇஅதிமுக ஆட்சியமைத்தால் விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

**<<<<>>>>**

ஆட்சிப் பொறுப்பில் இருந்து திமுகவை அகற்ற வேண்டும் என்ற ஒத்த கருத்துடைய அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுகவில் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்று தாம் கருதுவதாகத் தெரிவித்தார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறுவதற்காக அனைவரும் பாடுபட வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

**<<<<>>>>**

நீலகிரி மாவட்டம் உதகையில் மத்திய அரசின் கைவினைப் பொருட்கள் திட்டத்தின்கீழ் கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்று வருகிறது.

இதுபோன்ற கண்காட்சிகள் தங்களது தயாரிப்புகளை விற்பனை செய்வற்கு உதவிடும் வகையில் உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(Voice Byte - Beneficiary - 43 Sec)

பெண் தொழில்முனைவோர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் மத்திய அரசால் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

கிரீஸ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக ஒன்று புள்ளி எட்டு எட்டு பில்லியன் மதிப்பிலான சிறப்பு பொருளாதார தொகுப்பு நிதியை அந்நாட்டு பிரதமர் திரு. Kyria Kos Mitsotakis அறிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய ஆப்பிரிக்க நாடான Chadian-னில் காலரா தொற்று பாதிப்பு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 113ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

ஈரான்-சர்வதேச அணுசக்தி முகமையுடனான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான புதிய ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ரியாசி மற்றும் ராம்பன் பகுதியில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவிடும் வகையில் 5 நாட்களுக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று வடக்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை ராணுவப் பயிற்சி அகாடமியில் பயிற்சியை முடித்த அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதை விமானப்படை தளபதி ஏர்சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் முன்னிலையில் நடைபெற்றது.

<<<<>>>>

வானின் அரிய நிகழ்வான முழு சந்திரகிரகணம் இன்றிரவு மணி 9.57க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாநில அரசின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கைக் கால் பொருத்துதவதற்கான அளவீடு செய்யும் பணியை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி ஆய்வு செய்தார்.

<<<<>>>>

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூச்சொரிதல் விழாவில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

திருப்பூரில் பின்னலாடை கண்காட்சி இம்மாதம் 12ஆம் தேதி தொடங்கி 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் தோட்டக்கலைத்துறை சார்பில் 25 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆட்சியர் திரு. சதீஷ் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

ஆவடி மாநகராட்சியில் நாய்களுக்கான இலவச தடுப்பூசி செலுத்தும் முகாம் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பீஹாரின் ராஜ்கிரில் நடைபெற்ற சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா 7-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் இந்தியா, தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்களூரு அணி - பட்னா அணியையும், குஜராத் - தமிழக அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் பெங்கால் அணி - தெலுகு அணியையும், தில்லி - ஜெய்ப்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Madhurima Sawanth - அமெரிக்காவின் Didi Bredberg இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Garcia Patron - நெதர்லாந்தின் Vanja இணையை வென்றது.

<<<<>>>>

உலக வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா கலப்பு குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்கொரியாவின் Gwangju நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - சீன தாய்பேயை வென்றது.

<<<<>>>>

உலக Wushu சாம்பியன் போட்டியின் இந்தியாவின் Sagar வெண்கலப் பதக்கம் வென்றார்.

பிரேசிலில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 56 கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கராத்தே போட்டியில் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

<<<<The End>>>>